084

நடராஜன் துணை.

சங்கீத வித்வான் S. V. சுப்பைய பாகவதர், K. B. சுந்தராம்பாள், S. G. கிட்டப்பா முதலியவர்கள் பாடிவரும்

# கிராமபோன்

# இரத்தினாமிர்தம்

## நான்காம் பாகம்



சிதம்பரம், புத்தகவியாபாரம்,

... இராமாநுஜம் செட்டியார்

...ர்கள் வெளியிட்டது.

1930 [விலை அணா 2

...டம், 176, தங்கசாலைத் தெரு, சென்னை.

NR24
N30.4
186824

உ
கணபதி துணை

# கிராமபோன் இரத்தனம்ருதம்

(4-வது பாகம்)

சங்கீத வித்வான்

## S. V. சுப்பைய பாகவதர்

## பாடிய பாடல்கள்.

### S. S. விஸ்வநாததாஸ் அவர்கள் பாடிவருவது

கைராட்டினம் பாட்டு,

70 நம்பிக்கை கொண்டெல்லோரும்
கைராட்டை சுற்றுவீர்
கைராட்டை சுற்றுவீர் சுய
நாட்டைப் பற்றுவீர் தினம் ந

இராணுவ பலன் நமக் கேது
இராம பாணமிது போது எங்கும்
நடைபெறும் வெதிரிய மலரிய அடியோடு
நாளும் தப்பாது தினம் ந

தொகையறா.

வேலைபற்றிருக்கும் போது
விளையாட்டாய் நூற்கலாமே
பலநோய் பஞ்ச வினைக ளெல்லாம்
போக்கலாமே
சோலைசூழ் கிராமந்தோறும்
சுகம் பெறப் பார்க்கலாமே
சோம்பலும் குடியும் காமத்
துயரமே தீர்க்கலாமே

பாட்டு.

கார்த்தி முனிவர் திரு வாக்கியம் தினம்
கனவிலு மறவாதே யோக்கியம் இனி
கன்னீண் மணிசுவீர் மங்கள பாஸ்கரன்
சங்கீத பாக்கியம் தினம் ஞ்

## S V. சுப்பையபாகவதர் பாடிவருவது

## தூக்குத் தூக்கி

### தெம்மாங்கு

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி.

71 ஏருது மலைமேலே
எருது இரண்டு தத்தனிக்க
பாராமல் கைதொடுத்தான்
பழனிமலை ஆண்டவனே

1908
784.0954

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி.

சாயம் வெளுத்துப்போச்சு
சட்டாம்பிள்ளை ஒட்டலாச்சு
மாயமாய் தூக்குத்தூக்கி
வந்ததுங்கள் பாக்யமாச்சு
தங்கச்சி வாங்களேன் நடந்திடலாம்
மாப்பிள்ளையைப்பார்த்து மகிழ்ந்திடலாம்
கொஞ்சின கொஞ்சலென்ன
கோவில் வாச் சொன்னதென்ன
கொஞ்சமாட்டே னென்றுலே
உயிர்விடுவேனென்று சொன்னீர்
தங்கச்சி வாங்களேன் நடக்திடலாம்
மாப்பிள்ளையைப்பார்த்து மகிழ்ந்திடலாம்
தமிழ்நாடகாசிரியர் ஸ்ரீமான்

## S. S. சங்கரலிங்கக் கவிராயர் பாடியது.

முருகனிடம் என்முறை சொல்வாய் என்றமெட்டு

இராகம் - காம்போதி தாளம் - ஆதி.

72 தூது சென்றிதைக் சொல்லுவாய் கிளியே—காளுங்
அதிக்குமடி யவர்க்குவர மளிக்குமாறு முகத்தினிடங் கிளி

பல்லவி—சங்கத்தொடர்.

துஷடர்க்கரு வறுக்க வுதித்த
சஷ்டிரப்பு விடத்தை யடுத்து கிளி

துணைபென வடியவர் மனமதி
விலகிய சிவகுரு மானிடங் கிளி

தொண்டருக்குத் தொண்டரென வந்தநீல
கண்டருக்கு மந்திரம்புகன்ற கந்தனிடங் கிளி

அநுபல்லவி

வேதமாந் திருப் புகழுக்கினிய
விதரண சரவண பவகுக மகபதி மருமக னெனுமதி
மிக்கோர் போற்றும்
விண்முகப் பழகி சண்முகத்தினிடங் கிளி

சரணம்

சங்கீத கியானமுஞ் சாஹித்யஞானமுஞ்
சாரீர சம்பத்துஞ் சகலசௌபாக்யமுஞ்
சங்கரலிங்க சபாஜன மேன்மையுந்
தருவாயற்புத தெரிசனம் வருவாய் நற்றினமிதுவென
சந்தம் பொங்குந்
தத்துவமி குத்தபழ னிம்பதிபி
ருக்குமுரு கப்பனிட மித்தருணங் கிளி

---

ஞானம்பாள் அல்லது கற்புள்ள தாசிப்பெண்
ஓர் இனிய தமிழ்நாவல் விலை அணா 5.

## V. P. ஜானகியம்மாள் பாடிவருவது.

### அரிச்சந்திரன் தரு.

இராகம் - பைரவி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

73 வருவாயே வடபாலிநீ
வாராயவா நமச்சிவாயா வ

அநுபல்லவி

வருகத் தடை ஏனோ காதா வந்திடுவாய் கபலபாதா வ

சரணம்

மரலிதன்னை உதைத்தபாதா
மார்க்கண்டனை காத்தநாதா
பரமனே எனினும் வாதா
பாதுகாத்தருள் வாய் வினோதா வ
திரிபுர தகனதிசிலா
தேவரையன்று காத்தலோலா
அரியயனும் காணுமூலா
அடிபணிந்தேன் அருள் கபாலா வ

## K. B. சுந்தராம்பாள் பாடிவருவது.

### வள்ளி தரு.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் - ரூபகம்.

74 ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
சோ சோ சோ

காடை கௌதாரிகளா கருங்குருவி பக்ஷிகளா
மாடப்புராக் கிள்ளைகளா மாக்ஷிமிகும் குருவிகளா
சோ சோ சோ

கோதண்டவாத்தி குருவிகளா கூடுகட்டும் கிட்டுகளா
செண்டுபுரா அன்னங்களா கீர்த்திமிகும் காக்கைகளா
சோ சோ சோ

வானம்பாடி பைரிகளா வனத்தில் வாழும் புள்ளிகளா
தானுக கீதம்பாடும் தவுட்டுபுரு ஜோடிகளா
சோ சோ சோ

தினையழிக்க வந்தீர்களா திரமுள்ள கிள்ளைகளா
வினையமுடன் ஓட்டங்காட்டும் வீர அணிப்பிள்ளைகளா
சோ சோ சோ

## மதுரை மிஸ் A. சுந்தரம்

இராகம் தோடி - சகாபு.

பல்லவி.

75 ஞானக்கடலோரனே முருகா உனை
நாடிவந்தேன் இங்கு கார் உபகாரனே ஞா

அநுபல்லவி

தீன தயாளத் திருச் செந்தூர் மேலோனே
தேன்மொழியாள் குறவள்ளி மணாளனே
தீவினை நீக்கும் பொருளே வந்தாளெனை
சித்தனே முத்தனே கர்த்தனே
சத்தினேன் பித்தனைக் காத்தருள் ஞா

ஷை பல்லவி

இரவும் பகலுன்னையே இந்த
ஏழை நெஞ்சம் கசிந்துருகினேன்

ஷை அநுபல்லவி.

பரவும் பராசத்தி பாலப் பெருமானே
வரமுந்தரக் கத்தி வா வென்றழைத்தோனே
புரிமெரித்தோர்க்கு ப்ரணவ முறைத்தோனே
போகனே மயில் வாகனே சுக
யோகனே பாலாயி ஷேகனே ஞா

---

## பிரம்மஸ்ரீகோபாலகிருஷ்ணபாரதிகள் கீர்த்தனை

இராகம் - தன்யாசி, தாளம் ஆதி.

பல்லவி

76 கனகசபாபதி தரிசனம் ஒருநாள்
கண்டால் கலிதீரும் கன

அநுபல்லவி

சனகமஹாமுனி கைதொழுதேத்திய கன
தினகரகோடி தேஜோன்மயமாகிய கன

சரணம்

மனதிலொடுக்கிய கல்மஷம்போக்கும்
மாயப்பிறப்பறுத்து மறுவடிவாக்கும்
ஜனனமரணசமு சாரத்தை நீக்கும்
திருவடி நிழலிலே கூட்டியே காக்கும் கன

சுருதிமுடிகளில் சொல்லிக்கொண்டாடும்
தூயவெளியையொளி யாகவேகூடும்
தருமநெறியுந்தவ ரூதளம்நாடும்
தகிங்கணத்தோமென்று தாண்டவமாடும் கன

பற்பலயோசனை செய்வதுந் தொல்லை
பரகதியடைய வுபாயமுமில்லை
அற்புதமாகவே தானொரு சொல்லை
அணியுங்கோபால கிருஷ்ணன் பணிந்தில்லை கன

தமிழ் நாடகாசிரியர்

## ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் பாடியது

கவிகோல என்ற மெட்டு.

பல்லவி

77 மயிலாசல முருகனை யனுதின
மகிழுடன் நினைமனமே—வினை விடுமே மயி

அநுபல்லவி

கயிலாசன் கனிவுட னருளிய
கதிர்வடி வேற்கரனை—குருபரனை மயி

சரணம்.

குயிலார் மொழி வனிதையர் மயலதை
குணமென தினம்நாடி—பொருளைத்தேடி மயி

ஒலிலாயவற் கிடுவதில் பலனென்ன
உறவின ரொருகோடி—இருந்துமென்ன
அயலார் எமன் எதிர்வரும் பொழுதுன்னை
ஆதரித்திடுவாரோ—ஆகையினாலே மயி

ஸ்ரீ முஷ்ணம்

ஸ்ரீமான் R. பக்கிரிசாமிக் கவிராயர் பாடியது.

வேலவனே இந்த வீணனை ஏன் படைத்தாய் என்றமெட்டு

பல்லவி

78 கந்தனே இந்தச் சசடனையேன் படைத்தாய்-இந்த

அநுபல்லவி

கன்னியர்கள் போகமதில் சின்னபின்ன மாயலையும்

சரணம்

எந்நாளும் உன் பாதம் துதியாமல்
எத்தாய்பிழைத்திட்டே பணம் வைத்தே
புதைத்திட்டே கொடும் ௧

அன்னதானமென்ற சொல்லை நினையாமல்
ஆருக்குமே அரைக் காசுக் கொடுக்காமல்
புண்ணியவான் என்ற பேரை யெடுக்காமல்
பேய் போல் குலை நாய்போல்
எச்சிலைபோல் பறந்திடுமானிட ௧

உற்றார் பெற்றார் உரை வின்முறையைத்திட்டி
உரையடித்து உலையில்போடுபட்டி
மத்துருபாய்க் கஞ்சி வாங்கும் பெரும்வட்டி
பணவாசையால் பிணிமானிட
உனதாசையை நினையாமட ௩

தனத்தை சம்பாதித்து தானவய ருண்ணுமல்
தரணியோர்கழ் மெச்சத் தாழவே மண்ணினில்
இலைந்தார் பெண்டு பிள்ளை யெல்லோரறியாமல்
ஏங்கியுடல் வீங்கபணம்
பாங்கிதனில் வைக்கிறை க

பத்திபாய்ப் பழனி மலைதன்னைத் தேடாமல்
பக்கிரிசாமிப் பதமதை பாடாமல்
வெற்றிவேலு முரு கையனை நாடாமல்
வீணுயுடல தானைப் வளர்த்
தேமானிடம் காணும்மட க

இராகம்-உசேனி தாளம்-ரூபகம்.

79 கொஞ்சம சங்கடமா வந்து
கோலாகலமானல் லீலைசெய்திட கொ

அநுபல்லவி

நெஞ்செரியச்சொன்னேன் பஞ்சணைமீது
நித்திரை ஏது நினைவுமாராது
செஞ்சொல்கிளி உன்னைக் கொஞ்சிடத்தாது
தேடுதே உந்தனை நாடினபோது கொ

சரணம்

இனையளவுங் கருணையுடன் பாராயோ மானே
தனியரசும்பெற உன்னிடம் தாரேனோ நானே
சித்தித்தே மிகுமற்புத முத்துசாமிக்கவிபாடி
வைத்திடானையுரைப்பது பொய்ததுப்போச்சனிற்பது
சிலமா அநுகூலமா
நல்ல காலமா
ஜெக ஜாலமா பெண்ணே

தீராதசு என் பழிவரும்
நேராயுனர் உன் தென்பது
தினதினில் கணத்தினை
உலகத்தினில் கழித்திடேன் கொ

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி

பல்லவி

80 கல்லோ சொல்லாய் மனது
கார்த்திகேயனே முருகா க

அநுபல்லவி

வில்லாளி யார்விஜயன்
தீராதிதீரனே என்
சொல்லாலு தாரனே கண்
ஜோதி திருமால் மருகா க

தொகையறா.

கருணாகரா பழனிக் கடவுளே எனது முறை உன்
காதுகள் செவிடானதோ
முருகாவென உன் சுகதமுள்ளமே என்
தெய்வ உண்மை பயன் மெய்யானதோ

## மோகிப்புப்பாட்டு

இராகம் - தோடி தாளம் - ஆதி

பல்லவி

81 குணசாலி இவளுடைய சிநேகம்
கிடைப்பதருமை பெருமை பெருமை கு

அநுபல்லவி

குண சாலி பாக்கியசாலி
புத்தி சாலி தந்திர சாலி

சரணம்

இந்திரன் முதலோரும்
இவளின் வளங்கண்டு
தந்தினத் தாளம் போட்டு
தயங்கி மயங்கிடுமிவள் கு

ஆர்மோனிய வித்வான்

## K. T. நடராஜம் பிள்ளை பாடிவருவது.

32 கோருங்கள் கோருங்கள் கோருங்களே! அதி
கூறுங்கள் கூறுங்கள் கூறுங்களே! கோ

அநுபல்லவி

கூவுங்கொடி சேவலனை தேவர்படை காவலனை கோ

சரணம்

1 வாருங்கள் மானிட த்ரேகசந்தேகம்
பற்பலரால் நீவீர் கண்டனுபோகம்
தேறுங்கள் புண்ய நிதிபெரும் பாக்யம்
திருமுருகக் கடவுளடிக்
கிருபை பெற கருதிமிகக் கோ

2 பாவபுண்ணிய மீண்டும் நம்மோடே
பஞ்சபூதத்தாற் பயின்றதிக்கூடே
ஆவி போனாலோ மகா வெட்கக்கேடே
அதி மதுர கிளிவசனப்
பரிமளசற் குருபணியைக் கோ

3 ஆதியிற் பட்டினத் தாரின் சொல்லீதே
யாரிருந்தென்ன நமன் வரும்போதே
காதற்ற ஊசியும் கூட வாராதே
கண்டிடுவீர் தண்டமிழ்சொற்
கொண்டதுணை பண்டிதனை கோ

4 பொல்லாத லோபியர் கைபொருள்போலே
பூமியில்நாமிருந் தென்ன மென்மேலே
எல்லாம் அவன்செய லென்றெண்ணினாலே
இருட்டில் விளக்கை
எதற்கு வகித்தோம்

## K. B. சுந்தராம்பாள் பாடிவருவது

பல்லவி

33 செந்தூர் வேலாண்டி ஆண்டிதிரு செ
அவன்சேவை க்ஷேமந்தானடி செ
பந்தபாசங் கடந்தால்
பாவலர் உண்டு வந்தால்
பரமகுருபரன் அறுமுகசரவணன்
திருமலை முருகனும் முறையொடுவருமையும் செ

அநுபல்லவி தொடர்

பரிமளத்துயர் அரிய சொக்கர்மகிழ்
பிரியமுற்றதொரு வருகுமற்புதமே செ
படைத்தபிர்மனை அடைத்தசிறையினில்
உரைத்த பிரணவ முகத்தினகமகிழ் செ

சரணம் அநுபல்லவி கண்ணி

கந்தன் கடம்பன் குகன்
கன்னி வள்ளி லோலன்
கற்பனை தற்பர சாமிசொல் லற்புத
பொற்புயமுற்றில் சாமிதமிழ்ப் பதில் செ

NR21 N30

இராகம் - கமாஸ் தாளம் - ரூபகம்.

186824

பல்லவி

34 ஸுஜன ஜீவன ராம
ஸுகுண பூஷண ராம ஸு

அநுபல்லவி

புஜகபூஷ ணாஸ்ரித
புதஜ னாவன
அஜவந்தித ஸ்ரீதஸந்தன
தசதுரங்க மா ராமா ஸு

சரணம்

சாருநேத்ர ஸ்ரீகளத்ர
ஸ்ரீரம்ய காத்ர
தாராகாமஸ சரித்ர
தசரத புத்ர ஸ
தாரகாதிபா கன
தர்ம பாலகா
தாரயரகு வரநிர்மல
தியாக ராஜனுத ராமா ஸ

இராகம் - காபி தாளம் - ஆதி.

பல்லவி

85. வாவா முருகா வேலவா
வள்ளி மண வாளா வா

அநுபல்லவி

வெந்துயரால் நொந்து மிகச்
சிந்தைகலக்கங் கொண்டேன் வா

சரணம்

வீரர்கள் கண்டஞ்சிடும் சூரர்களை நாசம் செய்து
தேவர்களும் மூவரும் கூவிமலர் தூவப்பெற்றாய்
நாரதர் சொல்புனமே சேரவல்லியைக கண்டு
வேங்கை மரமாய்க் கிழவனாய் மங்கையை மோசம்செய்தாய்

எந்தன் சிந்தை குறையை
வந்து வுதவுரை யெனில்
உந்தன் பழனி சன்னிதி
வந்து தரிசிப்பேனுன்னை வா

S. V. சுப்பையா பாகவதர் பாடியது

நல்லதங்காளில் நல்லண்ணன் பாடுவது

86. என்னுடன் பிறந்த தங்கை
இங்கு வந்தவளா அவள்
தங்கி நொந்தனளா தன

எழுபிள்ளைக ளோடு இங்கு
வாழவந்த னளா தங்கை
தாழவந்த னளா என்

ஸ்ரீ அலங்காரி பாடுவது.

வந்து உண்டு சயனிக்கிறார்
வஞ்சியென் போ லே
அந்த மாதிற்கு குறை யேதுமேயி லை
சுப்ரமஞ்சத்தின் மே லே
அலுந்த சஞ்சலத் தா லே
நானே யறிவீ ர் என்
நாதனே யறிவீ ர்

இராகம் - அம்ருதவாசினி தாளம் ஆதி.

பல்லவி.

87 ஸ்ரீராம பாதமா நீக்ருபஜாலு னே
சித்தா கிக ராவே ஸ்ரீ

அநுபல்லவி.

வாரிஜபாவா ஸாகஸனந்தன
வாசவாதிநாரது வெல்லபூஜிஞ்சே ஸ்ரீ

சரணம்

தாராணிசிவயை தாபமுதளாக
வாரருகன்னி ருஹூராலக
சூர அஹல்பனு ஜுடசிப்ரோசிதா
ரீதிதன்புசாயவே தியாகராஜகேயம ஸ்ரீ

தமிழ் நாடகாசிரியர்

ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் பாடியது

ஆபோம்பே என்றமெட்டு.

88 ஆடுமயிலே கூத்தாடு மயிலே பழனி
ஆண்டவன் பாதம் கொண்டாடு மயிலே ஆ

ஆனைமுகன் தம்பி ஆறுமுகன் நல்ல
ஆறுபடை கோயில் வாழும் குகன்
கானக்குறவள்ளி மேவுஞ்சுகன் எங்கள்
கந்தனைக் கூட்டுவர் தாடு மயிலே ஆ

பஞ்சாக்ஷரவிபூதிப் பிரசாதமே வரும்
பால்காவடியும் பஞ்சாமிர்தமே
செஞ்சேவல் கூவுஞ் சுகானந்தமே நல்ல
தெரிசனந் தந்து நின் றுடுமயிலே ஆ

## வள்ளித் திருமணம்

### வேடன் தரு.

இராகம் - ஹரிகாம்போதி, தாளம் - திச்ர ரூபகம்.

39. சுப்—வலைதப்பிய குறமான்களே ஒரு
மானிங்கு கண்டீரோ நீங்களே
தலைதப்பியே யெந்தன் கணைதப்பியிங்ஙனம்
களைத்துவந்தமானை காணேனடியானே ஒரு

வள்ளி ஆர்காணும் நீர் சிலேவேடரே மானை
ஆட்புரத்தே வந்து தேடுதீர்
நீர்கண்டமானுக்கு காலுங்கையுமுண்டோ
நேருக்குநேராக நெருங்கிப் பேசுவதுண்டோ ஆர்

சுப்—வள்ளியே இந்தவழியாகவே நல்ல
புள்ளிமான் ஓடவே கண்டதுண்டோ
மெல்லியே யென்மனம் மேலும் மையல்கொண்டு
துல்லிதமாகவே தேர்ந்தேனுனைக்கண்டு வ

அள்ளி-அத்தை மகன்போலவே பேசுரீர் வீண்
ஆண்மைத்தனங்களை காட்டுரீர்
எத்துக்கள்ளா மாய வித்தைக்கள்ளா காமப்
பித்துக்கள்ளா பெரும் ஜித்துக்கள்ளாபோம் போம் அ

## T. S ரெங்கம்மாள், திருநெல்வேலி நத்தனூர்

இராகம் - நாதநாமக்கிரியா, தாளம் - ரூபகம்.

பல்லவி.

90 நடனமாடினர் ஐயர் நடனமாடினர்

அநுபல்லவி.

நடனமாடினர் தில்லை நாயகம் பொன்னம்பலந்தனில்

சுரம்

தாருதகிட தகஜம் பிரத்ததுண சனுததக தத்துமி
தத்துளாங்கு தகதளாங்கு தகதிருதறுக்கணதோமென ந

சரணம்

முத்திமடந்தை சித்திக்க சித்திக்க
மோகவல்லைகள் பத்திக்க பத்திக்க
பக்தர்கள் மனது தித்திக்க தித்திக்க
பாதச்சிலம்பு சத்திக்க சத்திக்க
பனிமதிசடையாட பதஞ்சலி மாமுனி மறையாட
பண்ணவர்கள் கொண்டாட
கோபாலகிருஷ்ணன் மத்தளம்போட

இராகம் - கமாஸ், தாளம் - மிஸ்ரசாப்பு.

பல்லவி.

91 மாதாட பாரதேனோ மா ரமணனே ஸது

அநுபல்லவி.

ப்ரீதிதோ ஜித ப்ராண நாதியுடனே மொாத்து நீனு

சரணம்

அங்கண பளதிங்கள் மிஸலாகிதோருதே
பரங்காவ ரதிகேளி பிதிபாருதே சாமி ஸது

மந்த மாருதமந்து மருளுமாடுதே சாமி
அந்தவுவ தேஹ கநதி பாடுதே சாமி மா
காமசாவு எஜ்ஜன மெய்கத சலிது
காமகிரி நாஹரி கேளியாய வேணே மா

---

## A. சாமி நாயுடு.

### இராகம் - முகாரி, தாளம் - ஆதி.

பல்லவி

92 எந்தனை தொடலாமா நீ மனதில்
சிந்திக்கவும் போமா எங்

அநுபல்லவி

சிந்தனை இருவரும் சந்திருக்க வேணும்
நிற்பத நியாயம் உன் கற்புக்கபாயம்
இல்லாதே ஏதும் சொல்லாதே
நெரியல்ல தாயே முறை தம்பி நீயே எங்

சரணம்.

அகலிகை முன்னால் அமரேசன் மீது
ஆசைப்பட்டதாலவன் யாசங்கொட்டானே
அறியாயோ நீ குறியாயோ
அன்னை பென் மந்தனை எண்ணிய பிறகும் எங்

ஆவணக காப்பக

---

Printed at the Sundaram Press, Madras.